**கந்தளாய் பிரதேச சபை - 2022**

-----------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கந்தளாய் பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானங்கள் மற்றும் செலவுகள் கணக்கு, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 172(1) உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் கந்தளாய் பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந் நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களிற்கான பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பிரதேச சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை,

பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் குறிப்பிடப்பட்ட தேவைகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் மாநகர சபையின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட பின்வரும் பரிந்துரைகள் உள்ளடக்கப்பட்டிருந்தன.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கூட்டுத் தொகை ரூபா 675,438 ஆன நிறுத்தி வைத்தல் சேமிப்பு மீதி நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படவில்லை. | தவறுதலாக அம் மீதிகள் கணக்குகளில் இருந்து விடுபட்டுள்ளது. எதிர்காலத்தில் கணக்குகளை தயாரிக்கும் போது அதனை சரிசெய்வதென. | சரியாக கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 திகதியன்று நிலவிய ரூபா 4,002,641 ஆன பொது களஞ்சிய இருப்பு மற்றும் ரூபா 405,457 ஆன ஆயர்வேத இருப்பு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் இவ்வாறான தவறுகள் இடம் பெறாதிருக்க கவனத்திற் கொளவதுடன், இந்த தவறை எதிர்வரும் ஆண்டில் கணக்குகளை தயாரிக்கும் போது சரிசெய்ய நடவடிக்கை எடுப்பதென. | - மேற்படி - |
| (இ) | ஜர்னல் குறிப்பு மூலம் ஆண்டின் பெறவேண்டிய வருமானத்தை கணக்கீடு செய்யும் போது அதனை முன்னைய ஆண்டின் வருமானமாக | இந்தத் தவறை ஜர்னல் குறிப்பு மூலம் எதிர்காலத்தில் கணக்குகளை தயாரிக்கும் | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| | திரண்ட நிதியத்திற்கு ஒப்படைத்ததால் ஆண்டின் வருமானம் ரூபா 9,020,931 இனால் குறைத்து காண்டிக்கப்பட்டிருந்தது. | போது சரிசெய்வதாக மற்றும் எதர்காலத்தில் இவ்வாறான குறைபாடுகள் இடம் பெறாதிருக்க பொறுப்பேற்பதென. | |
| (ஈ) | மீளாய்வாண்டில் வீதவரி மற்றும் வரி ரூபா 2,217,525 ஆன பில்லிடல் வருமானக் கணக்கிற்கு செலவு வைப்பதற்கு பதிலாக அக்கணக்கறிகு வரவு வைத்து திரண்ட நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. | தவறுதலாக அம் மீதி திரண்ட நிதியத்திற்கு செம்மையாக்கப்பட்டுள்ள போதும் எதிர்காலத்தில் அவ்வாறான தவறுகள் இடம் பெறாதிருக்க பொறுப்பேற்பதென. | - மேற்படி - |
| (உ) | ஜர்னல் குறிப்பு மூலம் ஆரம்ப மீதியை செம்மையாக்கும் போது ரூபா 7,054,592 ஆன நிதி மீதி மற்றும் ரூபா 7,157,988 ஆன கடன்கொடுனர் மீதி கணக்குகளிற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் கணக்குகளை தயாரிக்கும் போது சரிசெய்வதென. | - மேற்படி - |
| (ஊ) | மீளாய்வாண்டிற்கான கணக்காய்வு கட்டணத்திற்காக ஏற்பாடு ஒதுக்கப்பட்டிருக்காததுடன் 2008 ஆண்டு முதல் 2021 ஆண்டு வரை செலுத்த வேண்டிய ரூபா 416,770 ஆன கணக்காய்வுக் கட்டணத்தை கணக்கீடு செய்திருக்கவில்லை. | தவறுதலாக கணக்காய்வு கட்டணத்திற்காக ஏற்பாடு ஒதுக்க முடியாது போயுள்ளது. எதிர்காலத்தில் கணக்குகளை தயாரிக்கும் போது சரிசெய்வதென. | - மேற்படி - |
| (எ) | மீளாய்வாண்டு திசெம்பர் மாத்திற்காக கிடைக்க வேண்டிய சம்பள மீள்நிரப்பு ரூபா 2,901,112 தொகை மற்றும் ரூபா 375,000 உறுப்பினர் ஏற்பாட்டுத் தொகை கணக்கீடு செய்யப்பட்டு இருக்கவில்லை. | சரியான பெறுமானத்தை கணிப்பிட்டு எதிர்காலத்தில் சரி செய்ய நடவடிக்கை எடுப்பதென. | - மேற்படி - |
| (ஏ) | நிலையான வைப்பு ரூபா 2,000,000 தொகை மீளாய்வாண்டில் வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டு இருந்தது. | கூடுதலாக கணக்கீடு செய்யப்பட்டுள்ள வட்டி வருமானத்தை ஜர்னல் குறிப்பின் ஊடாக சரிசெய்ய நடவடிக்கை எடுப்பதென. | - மேற்படி - |
| (ஐ) | கூட்டுத் தொகை ரூபா 507,330 பெறுமதியான அன்பளிப்பாக கிடைத்த பண்டங்களை நிலையான சொத்துகளிற்கு எடுத்திருக்கவில்லை. | நிலையான சொத்துகளிற்கு எடுத்திருக்க ரூபா 507,330 பெறுமதியான அன்பளிப்புக்கள் தவறுதலாக கணக்கீடு செயய்ப்படாமையை எதிர்வரும் ஆண்டு கணக்குகள் தயாரிக்கப்படும் போது சரிசெய்ய நடவடிக்கை எடுப்பதென. | - மேற்படி - |

**1.6.2 கணக்காய்விற்கான ஆவண ரீதியான சான்றுகள் இல்லாமை**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியன்று பெறுமதி ரூபா 322,528,464 ஆன 07 கணக்கு விடயங்களை உரிதி, சொத்துக்களை ஒப்படைப்பு ஆவணங்கள், அட்டவணைகள் மற்றும் காலப்பகுப்பாய்வு சமர்பிக்கப்படாததால் கணக்காய்வின் போது திருப்திகரமாக பரீட்சிக்க முடியவில்லை. | குறித்த குறைபாடுகளை சீராக்குவதென. | கணக்கு விடயங்களிற்கான சரியான தகவல்களை சமர்பிக்க வேண்டும். |

**1.6.3 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்கு**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியன்று 03 கணக்கு மீதிகளின் கூட்டுத் தொகை மற்றும் அதற்குரிய ஆவணங்களின் கூட்டுத் தொகைக்கு இடையில் ரூபா 432,548 ஆன வித்தியாசம் ஒன்றானது. | எதிர்வரும் ஆண்டில் கணக்குகளை சரியாக தயாரிப்பதென. | ஆவணங்களை உரியவாறு பேணிக் கொள்ள வேண்டும். |

**1.7 இணக்கமின்மைகள்**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டம் | | | |
| (i) | 24 பிரிவு | சபைக்கு சொந்தமான பாதைகளை இனங்கண்டு அவற்றை வர்த்தமானியில் பிரசுரிக்க நடவடிக்கை எடுத்து இருக்காததுடன் பாதைகள் இன்வென்றி ஒன்றும் காணப்படவில்லை. | அலுவலகத்தில் காணப்படும் பாதை இன்வென்றியின் குறைகளை தயாரித்து உள்ளடக்கப்படாத சபைக்கு சொந்தமான பாதைகளை வர்த்தமானியில பிரசுரிக்க நடவடிக்கை எடுத்ததென. | காணப்படும் அனைத்து பாதைகளையும் இன்வென்றியிற்கு உட்படுத்தி வர்த்தமானியில் பிரசுரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ii) | 134 பிரிவு | அதிகார பிரதேசத்தில் அமைந்துள்ள முன்னேற்றமடைந்த பிரதேசங்களை காலத்திற்கு காலம் இனங்கண்டு வீதவரி அறவிட வேண்டிய போதும் 1980 ஆண்டிற்கு முன்னர் இனங்கண்ட பிரதேசங்களிற்கு மாத்திரம் வீதவரி அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் தேவையான நடவடிக்கை எடுப்பதென. | சட்ட ஏற்பாடுகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகார சட்டத்தின் 16 (2) பிரிவு | கணக்குகளுடன் சமர்ப்பிக்க வேண்டிய செயலாற்றுகை அறிக்கை கணக்கீட்டு உத்தியோகத்தரால் முன்வைக்கப்பட்டு இருக்கவில்லை. | செயலாற்றுகை அறிக்கையை எதரிகாலத்தில் முன்வைக்க நடவடிக்கை எடுப்பதென. | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | பிரதேச சபை (நிதி மற்றும் நிர்வாக) விதி | | | |
| (i) | 371 (2) (ஆ) ஆம் விதி | சபை 04 சந்தர்ப்பங்களில் வழங்கயிருந்த ரூபா 180,000 ஆன உப கட்டுநிதிகளை 38 நாட்களிற்கும் 274 நாட்களிற்கும் இடைலான கால தாமதமுடன் தீர்திதிருந்தது. | தவிசாளரின் அறிவுரையின் படி செயலாளரினால் குறித்த முற்பணத் தொகையை வழங்க நடவடிக்கை எடுத்துள்ளதுடன் எதிர்காலத்தில் அவ்வாறான செயலொன்று இடம் பெறாதிருக்க பொறுப்பேற்பதென. | நிதிப்பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) | 880 ஆம் விதி | பிணை வைக்க வேண்டிய 20 அலுவலர்களிடமிருந்து உரியவாறு பிணை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | சில அலுவலர்கள் பிணை வைப்புச் செய்தள்ளதுடன் ஏனைய அலுவலர்களிலிடமிருந்து அறவிட நடவடிக்கை எடுக்கப்படுவதென. | -மேற்படி- |
| (iii) | 1645 (ஆ) 1646 ஆம் விதி | சபைக்கு சொந்தமான 20 வாகனங்கள் தொடர்பாக தின ஓட்டக் குறிப்புக்கள் கணக்காய்வாளர் நாயகத்திற்கு | 2023.07.23 ஆம் திகதி தின ஓட்டக்குறிப்பு பொழிப்பு குறித்த கால எல்லைக்கு கணக்காய்வாளர் | -மேற்படி- |

| | | | | |
|---|---|---|---|---|
| | | சமர்ப்பிக்கப்பட்டு இருக்கவில்லை | நாயகத்திற்கு சமர்ப்பிக்கப்படுவதெென. | |
| (ஈ) | 2010 இன் 06 இலக்க கிழக்கு மாகாண முத்திரைக் கட்டணத்தை திருப்பும் நியதிச் சட்டம் | 2018 ஆண்டு முதல் 2021 ஆண்டு வரையான காலப்பகுதிக்காக கோரப்படாத ரூபா 1,783,680 ஆன முத்திரைக் கட்டணம் காணப்பட்டது. | பதிவாளர் அலுவலகத்திலிருந்து தகவல்களை கோரியுள்ளதுடன், அந்த விபரங்கள் கிடைத்த பின்னர் முத்திரைக் கட்டணத்தை அறவிட நடவடிக்கை எடுப்பதெென. | நியதிச்சட்டம் பிரகாரம் ந்வடிக்கை எடுக்க வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 51,602,610 ஆக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் மீண்டெழும் வருமானத்தை விஞ்சிய செலவினம் ரூபா 7,741,850 ஆகும்.

### 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக முன்வைக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு.

| வருமான மூலம் | 2022 | | | | 2021 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | மதிப்பிடப்பட்ட வருமானம் | பில் போடப்பட்ட வருமானம் | சேர்க்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம | பில் போடப்பட்ட வருமானம | சேர்க்கப்பட்ட வருமானம | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
| | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 |
| வீதவரி | 4,647 | 3,367 | 2,352 | 12,674 | 2,220 | 2,220 | 548 | 11,659 |
| வாடகை | 12,625 | 6,931 | 5,173 | 4,739 | 9,600 | 6,788 | 6,207 | 2,981 |
| ஏனைய வருமானம் | 1,900 | 4,900 | 4,900 | 5,946 | 11,500 | 25,196 | 19,458 | 5,946 |
| கூட்டுத் தொகை | 19,172 | 15,198 | 12,425 | 23,359 | 23,320 | 34,204 | 26,213 | 20,586 |

### 2.2.1 வருமானத்தை சேகரிப்பதற்கான செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| **(அ)** | **வீதவரி** | | |
| | 2022 திசெம்பர் 31 திகதியன்று ரூபா 12,673,815 நிலுவை வீதவரி காணப்பட்டதுடன் அவற்றின் 18 | அடுத்த ஆண்டு முதல் காணப்படும் நிலுவை மீதிகளை உரியவாறு | சட்டத்தின் ஏற்பாடுகள் பிரகாரம் நிலுவை வீதவரி அறவிட |

| | | |
|---|---|---|
| சந்தர்ப்பங்களில் ரூபா 50,000 இற்கு அதிக அளவில் அறவிட வேண்டிய நிலுவை வரி மீதி ரூபா 1,097,105 ஆனது. | அறவிட நடவடிக்கை எடுப்பதென. | நடவடிக்கை எடக்க வேண்டும். |

**(ஆ) கடையறை வாடகை**

| | | |
|---|---|---|
| பொதுச் சந்தையில் 66 கடையறைகளில் 18 கடையறைகள் எவ்வித பயன்பாட்டிற்கும் எடுக்கப்படாது இருந்ததுடன் அந்த 18 கடையறைகளிலிருந்து அறவிட வேண்டியிருந்த வாடகை தொகை சபைக்கு இழக்கப்பட்டிருந்தது. | கடையறை விலைமனு கோரலின் போது எவரும் குத்தகைக்கு எடுக்காத 2023 ஆண்டின் போது ரூபா 1600.00 ஆன தொகைக்கு இந்த கடையறைகளை குத்தகைக்கு வழங்க சபை தீர்மானமொன்றை எடுத்துள்ளதுடன், இதுவரை எவரும் அதற்காக விண்ணப்பிக்கவில்லையென. | மூடப்பட்டுள்ள கடையறைகளை முறையாக முத்தகைக்கு வழங்க வேண்டும். |

## 3. செயற்ாட்டு மீளாய்வு

பிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் பொது சுகாதாரம், பொதுப் பாவனைச் சேவைகள், பொது வீதி தொடர்பான விடயங்களை முறைமைப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல், பொதுமக்களின் நல்வாழ்வு, வசதிகள், நலன்புரி என்பனவாக சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செயற்பாடுகளை நிறைவேற்றுவது தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே தரப்படுகின்றன.

### 3.1 செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பிரதேச சபை சட்டத்தின் 126 பிரிவின் கீழ் பிரதான 28 விடயங்களை நிரைவேற்ற துணைச் சட்டம் விதிக்கப்படவிருந்த போதும் 2022 திசெம்பர் 31 திகதி வரை 05 விடயங்களிற்கு மாத்திரம் துணைச் சட்டம் விதிக்கப்பட்டிருந்தன. | பதில் வழங்கப்படவில்லை. | முறையாக துணைச் சட்டம் விதிக்கப்பட வேண்டும். |

### 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) சபை நிதியத்தினால் நலனாளிகலிற்கு வழங்கவுள்ள பொருட்களை நேரடியாக நலனாளிகலிற்கு வழங்காது தொகுதி பொறுப்பு அங்கத்தவரிற்கு விநியோகிக்கப்பட்டிருந்தது. இந்த பொருட்கள் உரியவாறு குறித்த தரப்பினரிற்கு கிடைத்ததனை | குறித்த தரப்பினரால் தொகுதிப் பொறுப்பு அங்கத்தவரிடமிருந்து அந்த பொருட்களை பெற்றுக் கொண்டதற்கான கடிதங்கள் இந்த அலுவலகத்திற்கு | சட்ட பிரகாரம் பணிகளை மேற்கொள்ள மற்றும் வெளிப்படைத் தன்மையுடன் செயற்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | உறுதிசெய்யும் ஆவணங்கள் எதுவும் சபை கோவையில் இருக்கவில்லை. 04 சந்தர்ப்பங்களில் அவ்வாறு பகிர்ந்தளித்த ரூபா 398,790 பெறுமதியான பொருட்கள் கிடைத்தமைக்கான எவ்வித உறுதிப்பாடும் இருக்கவில்லை. | சமர்பிக்கப்பட்டுள்ளன. | |
| (ஆ) | உப தலைவரின் எழுத்துமூல கோரிக்கையொன்றின் பிரகாரம் சமுதாய அடிப்படை சங்கமொன்றிற்கு விநியோகித்ததாக குறிப்பிடப்படும் ரூபா 97,933 பெறுமதியான 02 அலுவலக மேசைகள் மற்றும் 02 கதிரைகள் கணக்காய்வினால் மேற்கொண்ட பௌதீக பரிசோதனையின் போது உப தலைவரின் வீட்டில் வைக்கப்பட்டிருந்ததாக அவதானிக்கப்பட்டது. | உப தலைவரிற்கு குறித்த தொகுதியின் சங்கத்தினால் விடுக்கப்பட்ட கோரிக்கையின் பிரகாரம் இந்த பண்டங்கள் விழாவொன்றை ஒழுங்கு செய்து விநியோகிக்க நடவடிக்கை எடுத்துள்ளதென. | - மேற்படி - |

### 3.3 மனித வளங்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபையின் அங்கீகார ஆளணியினர் மற்றும் உள்ளவாறான ஆளணியினரை கவனத்திற் கொள்ளும் போது 11 பதவிகளில் 22 வெற்றிடங்கள் காணப்பட்டன. | வெற்றிடமாகியுள்ள பதவி வெற்றிடங்கள் தொடர்பாக உள்ளுராட்சி உதவி ஆணையாளர் ஊடாக உள்ளுராட்சி ஆணைளரிற்கு அறிவித்துள்ளதென. | வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | கடந்த ஆண்டு கணக்காய்வின் மூலம் சுட்டிக் காட்டியிருந்தவாறு சபையில் கடமையாறிக் கொண்டிருக்கையில் கடமையை விட்டுச் சென்ற மற்றும் கடமையிலிருந்து நீக்கப்பட்ட 05 ஊழயர்களிடமிருந்து அறவிட வேண்டிய ஊழியர் கடன் ரூபா 1,317,414 இனை தாபனவிதிக் கோவை XXIV அத்தியாயத்தின் 04 பிரிவின் பிரகாரம் அறவிட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிலுவை கடன் தொகையை அறவிடுவது தொடர்பாக சட்ட ஆலோசனை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுப்பதென. | நிதிப்பிரமானம் மற்றும் சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | 2018 சனவரி 24 திகதிய இலக்கம் 02/2018 கொண்ட பொது நிர்வாக சுற்றறிக்கையில் குறிப்பிடப்படும் இணைப்பு 02 படிவத்தை அடிப்படையாகக் கொண்டு சபையினால் மனிதவள திட்டமொன்றை தயாரித்து அதன் | மனிதவள திட்டத்தை தற்போது தயாரிக்க ஆரம்பித்துள்ளதென. | - மேற்படி - |

பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**3.4 வாகனத் தொகுதியின் முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மலசல கழிவகற்றும் பவுசரின் சேவையை வழங்க மீளாய்வாண்டினுள் ரூபா 842,060 ஆன எரிபொருள் செலவொன்று மேற்கொள்ளப்பட்டு இருந்ததுடன் அதற்கான ஈட்டலாக ரூபா 188,900 வருமானம் மாத்திரம் ஈட்டப்பட்டிருந்தது. | தற்போது மலசல கழிவகற்றும் பவுசரை சிறந்த உள்ளக் கட்டுப்பாட்டுடன் வாடகைக்கு வழங்குவதுடன் தற்போது காணப்படும் அதிகரித்த எரிபொருள் செலவின் மீது இந்த வருடத்திலிருந்து ஒரு தடவைக்கு மலசல கழிவற்றும் பவுசர் கட்டணமாக ரூபா 9,000.00 ஆன வாடகை அடிப்படையில் வழங்க தீர்மானித்துள்ளதென. | வாகன கட்டுப்பாட்டை முறையாக்க வேண்டும். |
| (ஆ) | மாவட்ட செயலகத்தினால் சபைக்கு வழங்கியிருந்த JCB இயந்திரத்தின் திருத்தத்திற்காக உள்ளூராட்சி நிறுவனங்களை வலுவூட்டும் நிகழ்சித் திட்டத்தின் (மூலதன) மூலம் ரூபா 1,903,500 ஆன ஏற்பாடு வழங்கப்பட்டிருந்ததுடன் அதற்கு 2021 திசெம்பர் 15 திகதிக்கு முன்னர் இறுதி பட்டியல் முன்வைக்க வேண்டியதாக இருந்தது. எனினும் 2022 திசெம்பர் 31 திகதி வரையும் இயந்திரத்தை திருத்தியிருக்காததுடன் திருத்ததாரரினால் JCB இயந்திரத்தின் என்ஜின் கழற்றி எடுத்துச் செல்லப்பட்டிருந்தது. | RS – 1461 கொண்ட JCB இயந்திரத்தின் திருத்த வேலைகள் தொடர்பாக ஆரம்ப விசாரணை ஒன்றை உள்ளூராட்சி உதவி ஆணையாளரினால் ஆரம்பிக்கப்பட்டுள்ளதால் விசாரணை பெறுபேற்றின் மீது முன்நடவடிக்கை எடுப்பதாக. | - மேற்படி - |
| (இ) | இயந்திரத்தை திருத்தியிருக்காத போதும் கன்தளாய் டிபோ உதவி முகாமை பொறியியலாளரினால் அந்த திருத்தத்தை முடிவு செய்துள்ளதாக போலியான ஆவணங்களை தயாரித்து 2021 திசெம்பர் 10 திகதி கையொப்பம் மற்றும் பதவி முத்திரையிட்டு திருத்தம் செய்யப்பட்டுள்ளதாக உறுதி செய்யப்பட்டிருந்தது. அதன் மீது 2022 ஆகஸ்ட் 15 திகதி திருத்துனர் ஒருவரிற்கு ரூபா 648,500 செலுத்தப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாட்சியும்

### 4.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஒவ்வொறு ஆண்டினதும் கணக்குகள் அடுத்துவரும் ஆண்டின் மார்ச் 31 திகதிக்கு முன்னர் அதிகாரியினால் கணக்காய்வாளர் நாயகத்திற்கு சமர்பிக்க வேண்டிய போதும் மீளாய்வாண்டின் கணக்குகள் சமர்பிக்கப்பட்டிருந்தது 2023 ஜுன் 01 ஆம் திகதியாகும். | இறுதி கணக்குகள் தயாரிப்பதற்கு தரவுகளை வழங்கப்பட வேண்டிய 05 அலுவலர்கள் இடமாற்றம் பெற்று விடுவிக்கப்பட்டு இருந்ததனால் புதிய அலவலர்களுக்கு அந்த தகவல்களை கண்டறிய தாமதமாகியதால் குறித்த திகதிக்கு சமர்ப்பிக்க முடியாமல் போனது. எதிர் வரும் ஆண்டின் போது அந்த தாமதத்தை தவிர்த்துக் கொள்ள நடவடிக்கை எடப்பதென. | சுற்றிக்கை பிரகாரம் கணக்குகள் உரிய திகதிற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

### 4.2 உள்ளக கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| உள்ளக கணக்காய்வு 03 அலுவலரகள் நியமிக்கப்பட்டிருந்த போதும் முறையான விதத்தில் செயற்பட்டு அறிக்கைகளை பேணி இருக்கவில்லை. | உள்ளக கணக்காய்வு 02 அலுவலர் நியமிக்கப்பட்டு கணக்காய்வு உத்தியோகத்தரினால் வழங்கும் அறிவுரைகள் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதென. | உள்ளக கணக்காய்வினை முறையாக்க வேண்டும். |

### 4.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இலக்கம் DNA/2019(1) கொண்ட சுற்றறிக்கை பிரகாரம் 2022 திசெம்பர் 31 திகதியின் முடிவடைந்த ஆண்டிற்கான கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு 04 நடாத்தியிருந்த போதும் கணக்காய்வாளர் நாயகத்தின் பிரதிநிதி ஒருவரை அவதானிப்பாளராக சமூகமளிக்கச் செய்திருக்கவில்லை. | 2023 ஆண்டு முதல் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவிற்கு கணக்காய்வாளர் நாயக திணைக்களத்தின் உத்தியோகத்தர்களை சமூகமளிக்கச் செய்து கொள்ள தேவையான நடவடிக்கை எடுத்துள்ளதென. | சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 4.4 பாதீட்டு கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த பாதீடு பிரகாரம் பாதிடப்பட்ட வருமானம் மற்றும் செலவினம் உள்ளவாறான வருமானம் மற்றும் செலவினங்களுடன் ஒப்பிடுகையில் 06 வருமான விடயங்களில் 19.67 சதவீதம் முதல் 232.87 சதவீதம் வரையும் 05 செலவின விடயங்களிற்காக 60.54 சதவீதம் முதல் 99.87 சதவீதம் வரையும் விலகல்கள் அவதானிக்கப்பட்டததனால் பாதீடு ஆக்கபூர்வமான கட்டுப்பாட்டு சாதனமொன்றாக பயன்படுத்தப்படவில்லையென ல்லையென அவதானிக்கப்பட்டது. | பதில் வழங்கப்படவில்லை. | பாதீடு நடைமுறைக்கு சாத்தியமானதாக தயாரிக்கப்பட வேண்டும். |

### 4.5 நிலைபேறான அபிவிருத்தி

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| சபையினால் 2017 இன் 19 ஆம் இலக்க நிலைபேறான அபிவிருத்தி சட்டத்திலுள்ள நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களையும் இலக்குகளையு மற்றும் குறித்த பிரமாணங்களையும் மீளாய்வாண்டினுள் இனங்கண்டிருக்கவில்லை. | சபையினால் 2017 இன் 19 ஆம் இலக்க நிலைபேறான அபிவிருத்தி சட்டத்திலுள்ள நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகளிற்குரிய பிரமாணங்களை மீளாய்வாண்டினுள் இனங்காணப்பட்டள்ளது. அது தொடர்பான அறிக்கை இணைக்கப்பட்டுள்ளது. | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள், இலக்குகள் மற்றும் குறித்த பிரமாணங்களை அடைந்துக்கொள்ள வேண்டும். |